# 03 அற விழுமியங்கள்

மனித வாழ்வை வளம்படுத்துதற்காக சைவநெறி பல அறங்களை எடுத்தியம்புகின்றது. அறநெறிக்குட்பட்டதே இந்துமதம் என்கின்ற வகையில், இந்துக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் தம்மாலான அறங்களைச் செய்ய இந்துமதம் மக்களை வழிப்படுத்துகின்றது. மாணவர்களாகிய நீங்கள் பல்வேறு அறங்களை அறிந்து, அவற்றை வாழ்வில் கடைப்பிடித்தொழுக வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னைய வகுப்புக்களில் பல்வேறு அறங்கள் பற்றி நீங்கள் கற்றிருப்பீர்கள். அவற்றையும் மனங்கொண்டு, இவ்வகுப்பில் ஒப்புரவு, ஈகை பற்றிய அறங்களைக் கற்று அவற்றைத் நம் வாழ்வில் கடைப்பிடித்தொழுகுவோம்.

## 1. ஒப்புரவு

திருவள்ளுவர் மனித வாழ்க்கையை ஆழமாக அலசி தெளிவாக உணர்ந்து மக்களின் நல்வாழ்வுக்காகப் பல வழிகளை நமக்குக் குறளமுத வடிவில் தந்துள்ளார். அவ்வாறு தந்த பலவகைக் கருத்துக்களில் ஒப்புரவு என்பது மிகவுயர்ந்த ஒரு கருத்தாக உள்ளது.

உலக மொழிகளிலுள்ள பல வகையான நூல்களிலும் காணப்படாத ஒரு பெரிய உண்மையை இந்த ஒப்புரவறிதலில் அவர் விளக்குகின்றார். ஒப்புரவு எனும் சொல் இப்போது பொது மக்களுக்குப் புரிகின்ற சொல்லாகப் புழக்கத்தில் இல்லை. அதனால் அதனுடைய விளக்கத்தை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். ஊரெல்லாம் ஒன்று எனக்கருதி ஒருவருக்கொருவர் உதவி, வாழ்வதுதான் ஒப்புரவாகும். இதனையே ஔவைப் பிராட்டியார் **''ஒப்புரவு ஒழுகு''** என ஆத்திசூடியில் குறிப்பிட்டுள்ளார். உலகத்தின் போக்கு எப்படி என அறிந்து அதன்படி நடந்து கொள்ளல் வேண்டும். உலக மக்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப ஒவ்வொருவரும் வாழவேண்டும். உலக நடைமுறைக்கு மாறுபட்டு வாழ்பவன் தனிமரமாகி நிற்பான். இக்கருத்தை திருவள்ளுவர்,

**''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**

**கல்லார் அறிவிலாதார்''** எனக் குறிப்பிட்டுள்ளார்.

இக்குறளின் கருத்தாகக அமைவது, உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர், பல நூல்களைக் கற்றறிந்த போதிலும், அறிவில்லாதவரே ஆவார் என்பதாகும். இதே கருத்தை **''ஊரொடு ஒத்துப்போ''** என்றும் **''ஊரொடு ஒத்து வாழ்''** என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். சுருக்கமாகச் சொன்னால்

சமூகத்திற்கு ஒருவன் செய்யும் நன்மைகளே ஒப்புரவு எனலாம். ''பிறருக்கு என்னுடைய செல்வத்திலே இருந்து ஏன் கொடுக்க வேண்டும்? நான் எதற்காக ஒருவனுக்கு உதவி செய்ய வேண்டும்? நாம் செய்வோமானால் அவர்கள் என்ன திருப்பிச் செய்வார்கள்?'' என்றெல்லாம் மனதிலே நினைத்து அவருடைய வாழ்க்கையிலே வேலி போட்டுக் கொள்பவர் அறிவுடையவராக மாட்டார்.

மருந்து மரம் என்பதை ஆதாரமாகக் கொண்டு திருவள்ளுவர் உலகிலே காணப்படுகின்ற இயற்கையான அனுபவத்தை நமக்கு ஓர் எளிமையான உவமையின் மூலம் தெளிவாக விளக்குகின்றார். உலகில் மக்களுக்கு நோய்கள் வருவது இயற்கை. நோய்கள் வந்தால், அவை அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. நோய்களில் பலவகையுள்ளன. கண்நோய், வயிற்றுநோய், எதிர்பாராமல் ஏற்படும் புண்கள், காய்ச்சல், தலைவலி இவை போன்ற பல நோய்கள் உள்ளன. இவற்றிலிருந்து விடுபடுவதற்கு மருந்தைத் தேடி மனிதன் செல்கின்றான். பக்கத்திலேயே ஒரு மரம் நிற்கின்றது. கைக்கு எட்டும் தூரத்தில் அந்த மரம் இலைகளையும் காய்களையும் கனிகளையும் கொண்டு நிற்கின்றது. எப்பொழுதும் அந்த மரத்தினுடைய பாகங்கள் மனிதனுக்கு உதவி செய்யக் காத்துக்கொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு நோயைப் போக்கக்கூடிய ஆற்றலுடையவை. அந்தப் பாகத்தை மனிதன் உட்கொண்டால், அந்த நோய் நீங்கிவிடும்.



**திருவள்ளுவர்**

வேப்பமரத்தை எடுத்துக்காட்டாக நாம் கவனிப்போம். தோலில் கொப்புளங்கள் தோன்றினால், வேப்ப இலையைச் சாந்தாக அரைத்துப் பூசினால், அவை நீங்கி விடுகின்றன. வேப்பம் பூவை உட்கொள்வோமேயானால், வயிற்றிலுள்ள புழுக்கள் சாகின்றன. வேப்பம் பட்டையை எடுத்து அதில் சாறு இறக்கிப் பக்குவப்படுத்திக் குடித்தால் தொற்றுநோய்க் காய்ச்சல் அடியோடு நீங்கி விடுகின்றது. இவ்வாறு பல்வித நோய்களுக்கும் வேப்பமரம் பல வகையாகப் பயன்படுகின்றது. இதைப்போலவே நல்ல மனமும், உயர்ந்த பண்பும், தெளிந்த அறிவும் கொண்ட ஒருவனிடம் செல்வமானது இருக்குமானால், சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் அவரவர் துன்பங்களுக்கு ஏற்றவாறு உதவியாக இருந்து அது அந்தந்தத் துன்பங்களைப் போக்கிவிடும். அவ்வாறு ஒருவன் தன்னைச் சுற்றிலுமுள்ள மக்களுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களைப் போக்குவதற்குரியவாறு தன் செல்வத்தைத் தந்து உதவுவானால், அவன் மிகவுயர்ந்த பேருபகாரியாக இருப்பான். அப்படிச் செய்யக்கூடியவனைப் பெருந்தகையாளன் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். பெருந்தகையாளனிடம் செல்வம் இருந்தால், அந்தச் செல்வம், நோயுடைய மக்களுக்கு அருகிலேயே எப்போதும் மருந்தைக்கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு மரம் போலப் பயன்படும். ***''மருந்தாகித் தப்பா மரத்தாற்றல் செல்வம் பெருந்தகை யான்கண் படின்''*** என்பது

திருவள்ளுவர் வாக்காகும். மருந்தாகும் மரம் தன் பகுதியை இழந்து பிறர்க்குக் கொடுத்துப் பிறரை வாழ வைப்பது போல ஒப்புரவாளனும் தனக்குரியதையும் தந்து தன் நலத்தையும் குறைத்துக் கொண்டு பிறர்க்கு உதவுவான்.

கடனறி காட்சியர் வாழ்க்கை எல்லோருக்கும் எப்பொழுதும் ஒரே சீராக அமைவதில்லை. மேலே இருப்பது கீழேயும் கீழே இருப்பது மேலேயும் மாறி மாறிச் சென்று கொண்டிருப்பது உலக நியதி. இதனை மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை ''கால மென்பது கறங்குபோற் சுழன்றுமேலது கீழா கீழது மேலா மாற்றிடும் தோற்றம்'' என மிக அழகாக எடுத்துக்காட்டுகின்றார். செல்வம் ஓரிடத்தில் நில்லாது வண்டிச் சக்கரம் போல் சுழன்று கொண்டே இருக்கும் என நாலடியார் கூறுகின்றது. நம் பெரியோர்கள் செல்வத்தின் நிலையாமை பற்றி மிக அழகுற எடுத்துக்கூறியுள்ளனர். செல்வன் ஒருவன் ஒப்புரவாளனாக இருக்கின்றான். ஆனால் இயற்கை நியதிப்படி அவனது செல்வம் குறைந்து கொண்டே செல்கின்றது. பின் எப்படி உதவுவது? தனக்குப் பின்தானே தானதருமம் எல்லாம். ஆனால் ஒப்புரவுக் கொள்கையை கடைப்பிடித்துப் பழக்கப்பட்ட மனம் அவ்வாறு தளர்வதில்லை. மேலும் மேலும் ஒப்புரவு செய்யவே அம்மனம் விரும்பிச் செல்கின்றது. அவர்களுடைய அறிவு அவர்களுடைய மனதைத் தளர விடுவதில்லை. மாறாக அறிவு, மனத்திற்கு ஊக்கமூட்டுகின்றது. உற்சாகத்தைக் கிளறிவிடுகின்றது. மனதை உறுதிப்படுத்துகின்றது.

செல்வம் குறையும் போது செலவினங்களைக் கட்டாயம் குறைக்க வேண்டும் என்ற நிலை வரும். ஆனால், எந்தச் செலவீனங்களைக் குறைப்பது? ஒப்புரவையா? இல்லை. எல்லாச் செயல்களையும் முழுவதும் குறைத்தாலும் ஒப்புரவுக்கு ஆகும் செலவை அறிவுடையவர்கள் குறைக்கமாட்டார்கள்.


இன்னகாலத்தில், இப்படித்தான் செய்யவேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்குள் ஒப்புரவு அடங்குவதில்லை. சமுதாயத்திற்குச் செய்யும் நன்மைகளைக் காலம் போக்காமல் காலாகாலத்தில் அவ்வப்போது உடனுக்குடன் செய்ய வேண்டும். இளையான்குடிமாற நாயனாரின் வரலாறு இதற்குச் தக்கச் சான்றாகும். எவ்வளவோ துன்பங்கள் அடுக்கடுக்காக வந்தும் விருந்தினருக்கு உணவு தர வேண்டும் என்பதற்காக எத்தனை துன்பங்களை எதிர்த்துப் போராடினார். சமுதாயத்திற்கு நன்மைகள் செய்வதில் என்றும் பின்வாங்காமல் உறுதியாக நிற்றல் திண்மையான அறிவுடையார் செயலாகும்.

தமிழ் நாட்டில் குமணன் என்ற குறுநில அரசன் வாழ்ந்தான். அவன் தம்பி இளங்குமணன் அவனைக் கொன்றுவிட்டு தான் அரச பதவியைப் பெறச் சூழ்ச்சி செய்தான். அதனால் குமணன் காட்டிற்குச் சென்று மறைந்து வாழ்ந்தான். அப்பொழுது அவனிடம் சிறிதும் செல்வம் இல்லை. அந்த நேரத்தில் புலவர் ஒருவர் அவனைப் பார்க்கப் போனார். அப்புலவர் வறுமையால் துன்புறுவதை உணர்ந்த குமண வள்ளல் உள்ளம் குமுறியது. இடமோ காடு, பருவமோ செல்வமில்லாத காலம். உள்ளமோ ஒப்புரவு உள்ளம். ஆதலால் புலவரைப் பார்த்து தன் தலையை தன் தம்பியிடம் கொடுத்து அதன் மூலம் புலவருடைய துன்பத்தைப் போக்கிக் கொள்ளுமாறு

குமணன் வேண்டுகின்றான். ஆகவே, இடமும் காலமும் பாராமல் ஒப்புரவுள்ளம் படைத்தவர்கள் தம் நலத்தையும் மறந்து பிறர் நலத்திற்காகவே வாழ நினைக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

சிவபெருமானுக்குத் தியாகராசன் என்றும் பெயர் உண்டு. கடலைக் கடைந்த காலத்தில் நஞ்சும் அமிழ்தும் தோன்றின. நஞ்சை உண்ண யாரும் முன்வரவில்லை. அது துன்பம் தரும் என்பதை எல்லோரும் அறிவார்கள். அது உண்பாரைக் கொல்லக்கூடியது என்று அறிந்தும் பிறர் துன்பத்தைப் போக்குவதற்காகச் சிவபெருமான் அந்நஞ்சினை உண்டார் என்பர். அதனால் அவர் தியாகராசனார் ஆனார். அது உயரிய ஒப்புரவுப் பண்பை விளக்குகின்றது. பிறருக்காக ஒருவன் சாவது மேலுலகைத் தரும் எனக் கம்பன் கூறுகின்றார்.

தியாகமும் ஒப்புரவாளனின் மிக உயரிய பண்பாகும். தியாகத்தின் உச்சக்கட்டத்தை எய்தியவர், புறாவுக்காகத் தன்னுடலை அரிந்து தந்த சிபி மன்னன் ஆவார்.



இக்காலத்திலும் சமுதாய நன்மைக்காகத் தம் துன்பத்தையும் பாராமல் பிறருக்காக உதவுபவர் பலரைக் காண்கின்றோம். இரத்தம் ஒருவர் வாழ்வதற்கு மிக மிக இன்றியமையாததாகும். இன்னொருவரை வாழ்விப்பதற்காக தம் இரத்தத்தைக் கொடுப்பவரும் ஒப்புரவாளரேயாகும். ஒருவருக்கு சிறுநீரகம் இரண்டு உண்டு. அவற்றுள் ஒன்றிருந்தாலும் போதும். அதனால் துன்புறும் ஒருவருக்குத் தம்மிடமுள்ள ஒரு சிறுநீரகத்தை மற்றவருக்கு எடுத்து வைப்பதற்காகக் கொடுக்கும் ஒப்புரவாளர்களை இன்றும் காண்கின்றோம். வாடிய பயிரைக் கண்டாலும் அவ் வாட்டத்தைப் போக்க முயலும் ஈர நெஞ்சினரையும் நாம் இன்றும் கண்டு கொண்டுதான் இருக்கின்றோம்.

## பாடச் சுருக்கம்

உலக மக்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப ஒவ்வொருவரும் வாழ்வதே ஒப்புரவாகும்.

ஔவையார், திருவள்ளுவர் போன்ற பலர் இது பற்றிய கருத்துக்களைத் தந்துள்ளனர்.

ஒப்புரவாற்றக் கால நேரம் கிடையாது.

ஒப்புரவால் உயர்ந்த குமணன், சிபிச்சக்கரவர்த்தி போன்ற பலர் காணப்படுகின்றனர்.

இன்றும் இரத்த தானம், உடல் உறுப்புத்தானம் போன்ற பல ஒப்புரவுச் செயற்பாடுகள் இடம்பெற்ற வண்ணம் இருக்கின்றன.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஒப்புரவு என்றால் என்ன?
2. **"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
   ***கல்லார் அறிவிலாதார்"*** எனும் குறளின் கருத்து யாது?
3. வேப்பமரத்தின் பயன்கள் மூன்று தருக.
4. பெருந்தகையாளன் எனத் திருவள்ளுவர் யாரைச் சிறப்பிக்கின்றார்?
5. குமண மன்னன் ஏன் ஒப்புரவாளராகப் போற்றப்படுகின்றார்?

## செயற்பாடு

திருக்குறளில் அறத்துப்பால், இல்லறவியலில், இடம்பெறும் ஒப்புரவறிதல் எனும் அதிகாரத்திலுள்ள பத்து குறட்பாக்களையும் மனனஞ் செய்து ஆசிரியரிடம் ஒப்புவிக்குக.

# 2. ஈகை

வறுமையில் வாடுவோர்க்கும், தேவை இருப்போர்க்கும் கொடுப்பதே ஈகையாகும். மற்றெல்லாச் செயல்களும் தனக்கு என்ன பலனளிக்கும் என்று எதிர்பார்த்துச் செய்வதேயாகும். ஈகை பற்றித் திருவள்ளுவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**''வறியார்க்கு ஒன்று ஈவதேஈகை மற்று எல்லாம்**

**குறியெதிர்ப்பை நீரது உடைத்து''**

இக்குறளின் கருத்தாவது, பதில் உதவி செய்ய முடியாத ஏழைகளுக்கு கொடுப்பதே ஈகையாகும். பிற கொடைகள் யாவும் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையை உடையது என்கின்றார். இதிலிருந்து வறியவர்களுக்கு பதில் உதவி எதிர்பாராது கொடுக்கும் சிறு உதவியே ஈகை எனக் கொள்ளலாம். இதனை வடமொழியில் 'தருமம்' என்பர். தருமத்தைப் பற்றி எல்லா மொழிகளிலும் பேசப்பட்டுள்ளது. வறியோர் பசி தீர்த்தலே ஒருவன் தான் செல்வத்தைச் சேர்த்து வைக்கும் இடமென்று சங்ககால மக்கள் எண்ணி வாழ்ந்துள்ளதை இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம். **''ஈவது விலக்கேல்''** என ஔவையார் சிறப்பிக்கின்றார்.

நாலடியார், ஒரு சிறிய அரிசியின் அளவாவது நாள் தோறும் உங்களால் இயன்ற அளவு பிறருக்கு கொடுத்து உண்ணுங்கள் என்றும், ஊர் நடுவில் பெண் பனையும் இருந்து அதைச் சுற்றிலும் திண்ணையும் இருந்தால், பலரும் வந்து பழத்தைப் பறித்துத் திண்ணையில் அமர்ந்து உண்பர். அதுபோலச் செல்வர் தம்மை அடைந்தவர்க்கு உண்ண உணவும், இருக்க இடமும் தருவர். செல்வம் பெருகியிருந்தும் யாருக்கும் கொடாதவர், அனைவராலும் வெறுக்கத்தக்க சுடுகாட்டில் உள்ள ஆண் பனை போல்வராவர் எனவும் குறிப்பிடுகின்றது.

ஈதல் இசைபட வாழ்தல் என்பது தமிழர் மரபு. தொன்றுதொட்டுப் போற்றப்படும் நெறிமுறை. எதைக் கொண்டு வந்தோம், எதைக் கொண்டு போகப் போகின்றோம் என்று வாழ்க்கையின் நிலையாமையைச் சிறிதளவு சிந்தித்தால், வறியவர்க்கு உதவ மனம் வரும்.

ஆதரவற்ற குழந்தைகளின் நிலையை யோசித்துப் பார்க்க வேண்டும். ஆதரவற்றோர் இல்லங்களுக்கு நாம் சென்று அவர்களோடு சிறிது நேரம் பழகினாலேயே அவர்கள் சந்தோஷம் அடைகின்றார்கள். பிரபலங்கள் தங்கள் பிறந்தநாள் அன்று இத்தகைய இல்லங்களுக்குச் சென்று இனிப்பு வழங்குவதை ஒரு சம்பிரதாயமாகக் கொண்டுள்ளார்கள். நாமும் அவ்வாறான நிலைமைகளைத் தோற்றுவித்துக் கொள்ளல் வேண்டும். அத்துடன் பண்டிகை நாட்களை ஆதரவற்ற குழந்தைகளோடு கொண்டாடினால் அது அவர்களது மனதுக்கு நிறைவினைத் தருவதோடு, மிகப் பெரிய ஈகையாகவும் கருதப்படும்.

**''ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''** என்று வித்யா தானத்தைப் பற்றி மகாகவி பாரதியார் பாடுகின்றார். நமக்குத் தெரிந்தவற்றை மற்றவர்க்குச் சொல்லிக் கொடுப்பதும், பயிற்றுவிப்பதும் மிகப் புனிதமான ஈகை என்பதில் ஐயமில்லை.

ஏழைக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை என்றால், பள்ளி அவர்களிடம் செல்ல வேண்டும் என்று விரும்பினார் சுவாமி விவேகானந்தர்.

ஈதல் என்பது நன்கொடையாகப் பணம் கொடுப்பது மட்டுமல்ல. நேரத்தையும் உழைப்பையும் கொடுப்பதும் கூட மிகச்சிறந்த தானம் தான். அதுதவிர வழிப்போக்கர்களையும், முன்பின் தெரியாதவர்களையும் எவ்வாறு பேணுகின்றோம், அவர்களுக்கு எவ்வாறு உதவுகின்றோம் என்பதும் ஒருவரது இரக்கக்குணத்தையும் உயர்ந்த பரிவையும் உணர்த்தும்.

## பாடச் சுருக்கம்

வறுமையில் வாடுவோர்க்கும், தேவை இருப்போர்க்கும் கொடுப்பதே ஈகையாகும்.

பதில் உதவி செய்ய முடியாத ஏழைகளுக்கு கொடுப்பதே ஈகையாகும்.

நமக்குத் தெரிந்தவற்றை மற்றவர்க்குச் சொல்லிக் கொடுப்பதும், பயிற்று விப்பதும் மிகப் புனிதமான ஈகை ஆகும்.

நேரத்தையும் உழைப்பையும் கொடுப்பதும் கூட மிகச்சிறந்த தானம் ஆகும்.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஈகை என்றால் என்ன?
2. **“வறியார்க்கு ஒன்று ஈவதேஈகை மற்று எல்லாம்**
   **குறியெதிர்ப்பை நீரது உடைத்து”** எனும் குறளின் கருத்து யாது?
3. சங்ககால மக்கள் செல்வத்தைச் சேர்த்து வைக்குமிடமாக எதனைக் கருதினர்?
4. செல்வமிருந்தும் கொடாதோரைப் பற்றி நாலடியார் எவ்வாறு குறிப்பிடுகின்றது?
5. வித்யா தானம் பற்றிய சுவாமி விவேகானந்தரின் கருத்து யாது?

## செயற்பாடு

ஆசிரியரின் உதவியுடன், உங்கள் பாடசாலைக்கு மிக அருகில் இருக்கும் ஆதரவற்ற குழந்தைகளின் இல்லமொன்றுக்குச் சென்று, உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள்.